01.09.2025

OS No: 316/2019

வா.சா. 3 திரு. சொக்கலிங்கம் த/பெ. லெட்சுமணன்

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இறந்து போன 1ம் வாதி மாணிக்கம் எனக்கு என்ன உறவு என்றால் அய்யா ஆவார். மேற்படி மாணிக்கம் வட்டிக்கு கடன் கொடுத்து வாங்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல தேங்காய் வியாபரம் செய்தார். கைமாற்றாகா யாரேனும் உதவியாக பணம் கேட்டால் உதவி செய்வார் என்றால் சரிதான். 1ம் வாதி மாணிக்கம் எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் தெரியாது. எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் 3 சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார். 1ம் வாதி மணிக்கத்திற்கு எத்தனை இடங்களில் தோப்புக்கள் உள்ளது என்றால் 6, 7 இடங்களில் உள்ளது. எனது நிரூபண வாக்குமூலத்திற்கான சங்கதிகள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். மாணிக்கம் 1ம் பிரதிவாதி நிலத்தை பார்ப்பதற்காக என்னை அழைத்து சென்றதாக சொல்லும் எந்த சர்வே எண் சொத்தை பார்க்க அழைத்து சென்றார் என்றால் சர்வே எண் தெரியாது. 1ம் பிரதிவாதியின் சொத்தை கிரையம் பெறுவதற்காக சொத்திற்கான வில்லங்க சான்று பத்திரங்களை 1ம் வாதி பரிசீலனை செய்தாரா என்றால் பரிசீலனை செய்தார் நான் பார்க்கவில்லை. 1ம் வாதி மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கில் குறிப்பிட்டதாக சொல்லப்படும் 3 சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சின்னசாமி என்பவர் பெயரில் இருந்தது. சின்ன சாமி என நாங்கள் அழைப்போம் அவருடைய பெயர் வேறு உள்ளது. அதன் பிறகு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் மாணிக்கம் பெயரில் இருந்தது. தாவா சொத்தில் நாச்சம்மாள் இருக்கிறாரா என்றால் நாச்சம்மாளும் அவருடைய கணவரும் இருக்கிறார்கள். தாவா சொத்தில் தென்னை மரங்கள் எத்தனை உள்ளன என்றால் நாங்கள் வைத்த 250 தென்னை மரங்கள் உள்ளன. 250 மரங்களுக்கும் 20 வயது இருக்குமா என்றால் 15 வருட மரங்கள் ஆகும். தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடம் எந்த வருடம் கிரையம் பேச

சென்றோம் என்றால் 2015 வருடம் இருக்கும். 1ம் வாதி மாணிக்கத்திற்கும் 1ம் பிரதிவாதி அவையனுக்கும் இடையே வேறு சொத்து சம்மந்தமாக கிரைய ஒப்பந்த பத்திரம் ஒன்று ஏற்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனக்கு படித்து காட்டினார்களா என்றால் படித்து காட்டினார்கள் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சின்ன சாமி தேங்காய் திருடி விற்றதால் தான் தாவா வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நாச்சம்மாளும் அவருடைய கணவரும் தற்போது இருந்து வருகிறார்கள் என்றால் 2 , 3 வருடங்களாக இருந்து வருகிறார்கள். வழக்கு விவரம் எனக்கு தெரியாமலும், வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாமலும் வாதி மாணிக்கம் எனக்கு அய்யா முறை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து நாச்சம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் மேற்படி சொத்தை நாச்சம்மாளும் அவருடைய கணவரும் அனுபவித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நாச்சாம்மாளை நாங்கள் சென்று பார்த்த போது தாவா சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டதாக எனது பிராமண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நாச்சம்மாளை நான் சந்தித்தது இல்லை எந்த காலத்திலும் தாவா சொத்தை கிரையம் அவரிடம் கேட்டதும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் காவலுக்கு இருந்தது இல்லை என்றும் நாச்சம்மாளும் அவருடைய கணவரும் தான் தாவா சொத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் தென்னங்கன்று வைத்ததாக சொல்வது எந்த வருடத்தில் என்றால் 2017ம் வருடம் ஆகும். தாவா சொத்தில் உள்ள மரங்களின் வயது 15 முதல் 20 என்றும் அதனால் 2017ம் நாங்கள் மரம் வைத்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. 1ம் வாதி மாணிக்கத்திற்கு 1ம் பிரதிவாதி அவையன் கடனுக்காக எழுதி கொடுத்த பத்திரத்தை வைத்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக மாணிக்கம் பொய்யாக வழக்கு போட்டுள்ளார் என்றும் அதில் நான் மாணிக்கத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவையன் கடனை கட்ட தயாராக உள்ளார் என்றும் மேற்படி கடனை பெற்றுக்கொள்ளாமல் சொத்தை அபகரிக்க வேண்டி தாவா வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(1, 3 பிரதிவாதிகள் மேற்படி குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.01 17:24:50 +0530